SOND

Better World Movement

இணைவோம். செயற்படுவோம். புதிய சமூகத்தினை உருவாக்குவோம்.

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk

T.P:- 077-3314262 E-Mail:-senthu@eureka.lk web:-www.sond.lk

Face book:- Social Organizations Networking for Development - (SOND)

# மாதாந்த அறிக்கை

வைகாசி, 2014

## Social Organizations Networking for Development

RKM Road
Akkaraipattu

No. 19, Saravana Road
Kallady Batticaloa.

60" Arasady Road
Jaffna.

## இதழின் உள்ளே

1. மட்டக்களப்பு
2. யாழ்
3. அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களினுடைய செயற்பாடுகள்

"We all will Create a Better World"

# மட்டக்களப்பு மாவட்டத்தின் செயற்பாடுகள்

## கால நிலை மாற்றம் தொடர்பான கலந்துரையாடல்

2014.05.30 ல் மட்டக்களப்பு மாவட்டத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான செயலணி உருவாக்கல் தொடர்பாக கலந்துரையாடல் மட்டக்களப்பில் நடைபெற்ற போது உள்ளூர், சர்வதேச அரசசார்பற்ற உத்தியோகத்தர் பல்வேறு திணைக்கள அரச பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் இடர்கள் பற்றி திரு.ராஜன் இருதயநாதன் அவர்களால் விளங்கப்படுத்தப்பட்டது.

மாவட்டத்தில் இத்தகைய ஒருசெயலணியின் அவசியம் செயற்பாடு பற்றிபங்கு பற்றுனர்களால் ஆராயப்பட்டது.



**“We all will Create a Better World”**

SOND

# யாழ் மாவட்டத்தின் செயற்பாடுகள்

## உற்பத்தியாளர்களுக்கான கலந்துரையாடல்

எமது பகுதியில் எல்லா வகை உற்பத்திகளை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களின் உற்பத்திகளுக்கான சிறந்த சந்தை வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் எமது SOND அலுவலகத்தில் 04.05.2014 அன்று நடாத்தப்பட்ட உள்ளூர் உற்பத்தியாளர்களின் செயற்குழு உடனான கலந்துரையாடலின் போது அவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் அதற்கான தீர்வுகள் சிலவும் முன்வைக்கப்பட்டன.

மேற்படி உற்பத்தியாளருக்கான கலந்துரையாடல் 22.05.2014 எமது அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் காகில்ஸ் (Cargills) நிறுவனத்தினுடைய வட மாகாணத்திற்கு பொறுப்பான வர்த்தக மேம்பாட்டு அதிகாரி திரு.சாமுவேல் நேசகுமார் அவர்கள் கலந்து கொண்டிருந்தார்.



## தகவல் வளநிலையம்

SOND நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சமூகத்திற்கு பயனுள்ள 85 புத்தகங்கள் யாழ்ப்பாணத்திலுள்ள கிராம சேவையாளர் மற்றும் யாழ் அரசசார்பற்ற இணையத்திற்கு வழங்கப்பட்டது.

**“We all will Create a Better World”**

# அம்பாறை மாவட்டத்தின் செயற்பாடுகள்

**எதிர்காலத்தில் சிறந்த சூழலை உருவாக்கிக் கொள்வதற்கு உகந்த சமூகத்தினை கட்டி யெழுப்புதல்**

*பரிந்துரைப்பிற்கான அடையாளம் காணுதல் தொடர்பான கலந்துரையாடல்*

அம்பாறை மாவட்டத்தில் செயற்படுகின்ற அரசசார்பற்ற அமைப்புக்களால் ஏனைய தரப்பினர்களுக்கு மேற் கொள்ளக் கூடிய பரிந்துரைப்புக்கள் தொடர்பான கலந்துரையாடல் 2014.05.13ம் திகதி அக்கரைப்பற்று சொண்ட் அலுவலகத்தில் அமைப்பின் நிறைவேற்றுப்பணிப்பாளரால் நடாத்தப்பட்டது .அம்பாறை மாவட்டத்தில் செயற்படும் பலஅமைப்புக்கள் கலந்து கொண்டுள்ளன.

பின்னர் இதன் தொடர் நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் 2014.05.22ம் திகதி SOND அலுவலகத்தில் பணியாளர் விஜயகுமாரினால் நடாத்தப்பட்டது. இதில் பரிந்துரைப்பு செய்யப்படவேண்டிய விடயங்கள், எவ்வாறு பரிந்துரைப்பு செய்வது போன்ற திட்டமிடல் தொடர்பாக பேசப்பட்டது. பரிந்துரைப்பினை எவ்வாறு செய்வது முதல் கட்ட செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் JUNE மாதம் இடம் பெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.







## விவசாயப் பண்ணை

இயற்கை முறையிலான விவசாயம் தொடர்பான விழிப்புணர்வினை மக்களுக்கு ஏற்படுத்தலினை நோக்காகக் கொண்டு அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் தங்கவேலாயுதபுரம் எனும் கிராமத்தில் SOND அமைப்பினால் 11ஏக்கர் விவசாயப் பண்ணையானது செயற்படுத்தப்பட்டு வருகின்றுது. தற்போது இப் பண்ணையில் தென்னை, வாழை, மரக்கறி பயிரினங்கள் நடுகை பண்ணப்பட்டு மக்களிற்கு விற்பனைக்காக வழங்கப்படுகின்றது













## பாலர் பாடசாலை

அம்பாறை மாவட்ட முன் பள்ளி ஆசிரியர்களுடைய ஆக்கச் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலானது 2014.05.21ம் திகதி அன்று மாலை 02.30 மணிக்கு SOND அமைப்பின் பணியாளரான R.பத்மநாதன் அவர்களின் தலைமையில் எமது அலுவலக பயிற்சி மண்டபத்தில் நடாத்தப்பட்டது. 13 முன்பள்ளியைச் சேர்ந்த 23ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



## பணியாளர் கலந்துரையாடல்

பண்ணையின் செயற்பாடு, அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நிறைவேற்றுப்பணிப்பாளரால் 2014.05.06,15 திகதி மட்டக்களப்பு , அக்கரைப்பற்று SOND அலுவலகத்தில் நடாத்தப்பட்டது இதில் 9 பேர் கலந்து கொண்டுள்ளார்கள்

**"We all will Create a Better World"**

SOND

# நிதியின்றிய செயற்திட்டம்

அரசசார்பற்ற நிறுவன மென்றால் அது நிதி யோடுதான் செயற்படும் என்ற மாயை கற்றவரிடையே கூட உள்ளது. இக் கருத்தினை மாற்றி நிதியின்றி சிலரின் நேரத்தையும் எமது வளத்தையும் பயன்படுத்திச் செய்யப்படும் கீழ்வரும் செயற்திட்டங்கள் இவற்றிற்குநல் உதாரணங்களாகும்.

## சிறுவர் திட்டம்

சிறுவர் மேம்பாட்டினை மையமாகக் கொண்டு கடந்த 2011.மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை சிறுவர் செயற்திட்டம் எமது அமைப்பின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இச் செயற்பாட்டில் ஆலையடிவேம்பு,அக்கரைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட தமிழ் , முஸ்லீம்,சிங்கள இனத்தினைச் சேர்ந்த21 ஆண்,29 பெண் உள்ளடங்கலாக 50 சிறுவர்கள் இச் செயற்பாட்டில் இணைந்துள்ளார்கள்.

### சிறுவர்களினால் மேற்கொள்ளப்பட்ட விசேட செயற்பாடுகள்.

2014.05.13ம் திகதி அக்கரைப்பற்று ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சித்திரைத் திருவிழா நிகழ்வில் எமது அமைப்பின் கீழ் உள்ள காந்தி சிறுவர் கழக உறுப்பினர்கள் 10 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிக்காட்டியுள்ளார்கள்.

இம் மாதம் சிறுவர்களினால் நான்கு நடமாடும் நூலகசேவை மேற் கொள்ளப்பட்டது. இதன் போது 199 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### SONDஅமைப்பினால் மேற்கொள்ளப்பட்டவிசேடசெயற்பாடுகள்.

சிறுவர்களின் ஒய்வு நேரங்களை பயனுள்ள வழியில் கழிக்கும் வகையில் வாராந்த கலந்துரையாடலின் முடிவின் போது சிறுவர்கள் விளையாடுவதற்காக கரன்வோட், கிரிக்கெட் வெட், ஸ்பிங் ஆகிய மூன்று வகையான விளையாட்டுப் பொருள் 05 தடவைகள் வழங்கப்பட்டது.

சிறுவர்களுக்கு மூன்று திரைப்படக்காட்சி காண்பிக்கப்பட்டுள்ளது. இதில் 21பேர் கலந்து கொண்டுள்ளார்கள்.









SOND

## 01. வளநிலையப் பயன்பாடு

சமூகத்தில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் பொருட்டு எமது அமைப்பில் மக்களுக்கான நூலகசேவை செய்யப்பட்டு வருகின்றது. இதனடிப்படையில் இம்மாதம் சிறுவர், இளையோர், நிறுவனப் பணியாளர்கள்,அரசாங்க ஊழியர்கள் ஆகியோர் 10 தலைப்பில் 264 புத்தகங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



SOND



## தொலைநோக்கு

"புதிய சமூகம் உருவாக்குவோம்"

## பணிநோக்கு

சமூகத்தில் உள்ள சகல தரப்பினரையும் நிறுவனங்களுக்கும் உதவி வழிகாட்டி சமூக மாற்றத்தின் வேலைத்திட்டங்களில் வலுவூட்டிப் பங்காளிகளாக்கி சமூக மாற்றச் செயற்பாடுகளில் பங்கு கொள்ளவைத்தல்.

**"We all will Create a Better World"**